முனைவர் இ. ஜே. சுந்தர்

# வாக்குத் தவறாமை வல்லமை தரும்!

உயிருக்குயிரான நண்பர்களான மைக்கிள், தாமஸ் ஆகிய இருவரும், இரத்தம் வரக்கீறி, கைகொடுத்து ஒரு வாக்குறுதி எடுத்தார்கள். அதாவது ஒருவருக்குத் திருமணமாகும்போது, எங்கிருந்தாலும், எந்தச் சூழலிலும் மற்றொருவர் மாப்பிள்ளைத் தோழனாக வந்து விட வேண்டும். எதிர்பாராவிதமாக மைக்கிள் உடல் நலிவுற்று இறந்துவிட்டான்.

தாமசுக்கு எலிசபெத் என்ற பெண்ணுடன் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணத்திற்கு முன் தாமசுக்குத் தன் நண்பனுடன் செய்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. ஆனால், வாக்குறுதியை நிறைவேற்ற நண்பன் உயிரோடு இல்லையே. எனினும் திருமணத்திற்கு முன்பு நண்பனின் கல்லறைக்குச் சென்று, ''எனக்குத் திருமணமாகும்போது நீ மாப்பிள்ளைத் தோழனாக வரமுடியவில்லையே. வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்'' என வாய்விட்டு அழுதான். அப்போது தன் கண்களையே நம்பமுடியாதபடி நண்பன் மைக்கிள் உயிருடன் கல்லறையிலிருந்து வெளியே வந்தான். ''வாக்குறுதி வழங்கியவர்கள் அதை நிறைவேற்றும் வரை சொர்க்கத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள். உன் வரவுக்காகவே காத்திருந்தேன். வந்துவிட்டாய். வா போகலாம்'' என்றான்.

ஊரிலுள்ளவர்கள் நடந்ததைக் கேட்டு, நம்ப மறுத்து, பின்பு மகிழ்ந்தார்கள். திருமணத்தில் தாமசின் மாப்பிள்ளைத்தோழனாக மைக்கிள் கம்பீரமாக நின்று தன் வாக்குறுதியைக் காப்பாற்றினான். திருமணம் முடிந்து நடனம் தொடங்கியது. ''நண்பா, என் பணிமுடிந்துவிட்டது. இனி நான் கிளம்பியாக வேண்டும். விடைகொடு'' என்றான் மைக்கிள். ''உன்னோடு கல்லறைக்கதவு வரை வந்து வழியனுப்புகிறேன்'' என்று கூறிய தாமசை அவனுடன் செல்ல அனுமதித்தாள் புதுமனைவி. ''அன்பே! கல்லறை இதோ பக்கத்தில்தான் உள்ளது. நடனம் நடந்துகொண்டிருக்கட்டும். சில விநாடிகளில் திரும்பி வந்துவிடுகிறேன்'' என்று மனைவியிடம் வாக்களித்துவிட்டு நண்பனுடன் சென்றான்.

கல்லறை வளாகக் கதவைத் திறந்தார்கள். உள்ளே தென்பட்ட பூங்காப் பாதையில் கண்கொள்ளாக்காட்சிகள். இதுவரை கேட்டிராத இசை. மனத்தில் மட்டற்ற மகிழ்ச்சி. இதுவே நண்பனுக்காகத் திறக்கப்பட்ட சொர்க்கத்தின் வழி என தாமஸ் புரிந்துகொண்டு, ''நண்பா, நானும் உன்கூடக் கொஞ்ச தூரம் வந்து வழியனுப்புகிறேனே'' என்றதற்கு நண்பனால் மறுக்க முடியவில்லை. மெய்மறந்து நடந்தபோது கடிகாரத்தில் ஒரு மணிநேரம் ஓடிவிட்டது. ''ஐயோ! தாமதமாகிவிட்டது. காத்திருப்பார்கள். எனக்கு விடைகொடு'' என தாமஸ் திருப்பிவந்து கல்லறை இடத்தைப்பார்த்தபோது, எல்லாம் வேறுமாதிரி இருந்தது. சாலைக்கு வந்தான். புதிய கட்டடங்கள். வேறு உடையில் மனிதர்கள். திருமணம் நடந்த இடமே இல்லை.

ஒன்றும் புரியாத குழப்பத்தில் திருமணம் நிகழ்ந்த தேவாலயத்திற்குச் சென்று அங்கிருந்த பாதிரியாரிடம் நடந்ததைச் சொன்னான். அவரோ, ''என்ன தம்பி நீ சொல்வது, நான் பல முறை கேட்ட பழைய கதை மாதிரி உள்ளதே. இதோ பார் பதிவேட்டை! 150 ஆண்டுகளுக்கு முன் தாமஸ், எலிசபெத் என்ற பெயரில் இதே நாளில் ஒரு திருமணம் நடந்திருக்கிறது. தாமசின் மனைவி, திரும்பி வருகிறேன் என்று சொன்ன கணவனுக்காகப் பல நாள்கள் அழுகையுடன், காத்திருந்து நோய்வாய்ப்பட்டு இறந்துபோனதாகச் சொல்வார்கள்'' என்றார்.

அதிர்ந்து போனான் தாமஸ். வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதால் அவனும் இக்கல்லறை வளாகத்தில் ஆவியாகச் சுற்றித்திரிந்து, யார் எதிர்ப்பட்டாலும் தன் மனைவியைப் பற்றி விசாரித்துக் கொண்டேயிருக்கிறானாம்.

இப்படி உண்மையும், கற்பனையும் கலந்த கதையொன்று அமெரிக்கத் தென்மாநிலமான லூசியானாவில் நிலவுகிறது. வாக்குத் தவறாமையின் இன்றியமையாமையை உணர்த்த சொல்லப்பட்ட இந்தக் கதை வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினால் சொர்க்கத்திற்குச் செல்லமுடியாமல், ஆவியாகச் சுற்றவேண்டியிருக்கும் என்ற படிப்பினையுடன் முடிகிறது.



தனிமனித ஆளுமைக்கு ஒளியூட்டும் உயர்பண்பே வாக்குத்தவறாமை. நம்பகத்தன்மை நம் மேல் ஏற்பட அடிப்படையானது வாக்குத் தவறாமையே! சொல்வது வேறு செய்வது வேறாக இருக்கிறவர்களின் பேச்சு நீர்மேல் எழுத்தாகும். இப்படிப்பட்டவர்களின் உறவு கனவிலும் வந்து தீமை செய்யும் என்பார் வள்ளுவர்:

கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு (819)

கூடி வாழ்வோம் என்று அளித்த வாக்குறுதியை, ஆணோ, பெண்ணோ கைவிட்டபோதுதான் திருமணம் என்ற அமைப்பு தோன்றியது. 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்று தொல்காப்பியம் திருமணம் என்ற சடங்கு ஏன் தோன்றியது என்பதை விளக்குகிறது. (ஐயர்- உயர்ந்தோர், கரணம்- திருமணம்)

வாக்கு நாணயம் தவறியபோதுதான் அவநம்பிக்கையின் சின்னமாக உலோக நாணயம் தோன்றியது. நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்த மனித சமூகத்தில், அளித்த வாக்குகள் தவறியதால்தான் சட்டங்களை எழுத்தில் வடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றும் பிரிட்டனில் எழுதப்படாத சட்டங்கள் உள்ளன. ஆங்கிலேயர்கள் தம் நேர்மையின் அத்தாட்சியாக இந்நிலையைக் கருதிவருகின்றனர்.

புகழ்பெற்ற நிறுவனங்கள் தரும் வாக்குறுதிகள் உண்மையானவை என்று உணர்ந்ததாலேயே மக்கள் அவர்களின் பொருள்களைப் பெருமளவில் வாங்குகின்றனர். வணிகத்தின் வெற்றியை வாக்குத் தவறாமை நிர்ணயிக்கிறது. வாக்குத் தவறும் ஆட்சியாளர்கள், அடுத்த தேர்தலிலோ அல்லது அதற்கு முன்போ அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

சக்திக்கு மீறி உணர்ச்சி வசப்பட்டு வாக்குறுதி கொடுத்தவர்கள் இன்னலில் சிக்குவர். இராமாயணத்தில் தசரதன் இப்படிக் கொடுத்த வாக்குதான் இராமனைக் காட்டுக்கு அனுப்பியது

## வல்லமை தரும் வாக்குத் தவறாமையைக் கடைப்பிடிக்கச் சில வழிகள்:

1. செய்யக்கூடியதை மட்டும் வாக்களியுங்கள். வாக்களித்ததைவிட மிகுதியாகச் செய்யுங்கள். இதனால் உங்கள் மேல் மற்றவர்களுக்கு நம்பிக்கை கூடும்.

2. சிறியவற்றில் வாக்குத் தவறுவது கூட மனித உறவுகளில் பெரும் இழப்பை ஏற்படுத்தும். கைப் பேசியில் நீங்கள் தவறவிட்ட அழைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ள மறவாதீர்கள். 'பரபரப்பான சூழலில் இருக்கிறேன். பிறகு பேசுகிறேன்' என்று சொல்லிவிட்டு மறந்துவிடுவது பெரும் அவநம்பிக்கையை உங்கள் மேல் தோற்றுவிக்கக் கூடும். எளிதான வாக்குறுதிகளாயினும் அசட்டை செய்யாது காப்பாற்றுங்கள்.

3. அவசரப்பட்டு, செய்ய முடியாத வாக்குறுதிகளைத் தராதீர்கள். அப்படித் தந்துவிட்டால் நிறைவேற்ற முடியாதமைக்குப் பொய் சொல்வது ஆபத்தானது. ஒரு பொய் 100 பொய்களின் தாய். இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேளுங்கள்.

4. கடன் வாங்கி இந்தத் தேதியில் திரும்பித் தருகிறேன் என்று வாக்களிக்கும்போது, சில நாள்கள் தள்ளியே சொல்லுங்கள். கொடுக்கமுடியா நிலை வந்தால், தவணை நாளுக்கு முன்பாகவே சென்று நிலையை விளக்கி அடுத்து நிச்சயம் தரக்கூடிய தேதியைக் கூறித் தவறாமல் திருப்பித்தந்து உங்கள் நம்பகத்தன்மையைக் காப்பாற்றுங்கள்.